## பொதுப்பணித்துறை
## கொதிகலன்கள் இயக்ககம், தமிழ்நாடு
### <u>அறிவிப்பு</u>
## கொதிகலன் பணியாளர் தேர்வு - 2013
### (Boiler Attendant Examination - 2013)

2013 ஆண்டிற்கான கொதிகலன் பணியாளர் தேர்வு (Boiler Attendant Examination) சென்னை, திருச்சிராப்பள்ளி மற்றும் கோயம்புத்தூர் ஆகிய நகரங்களில் நடைபெற உள்ளது . அதற்கான விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது.

தமிழ்நாடு மற்றும் பாண்டிச்சேரி தவிர இதர மாநிலங்களிலிருந்து பெறப்படும் விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்படமாட்டாது.

தேர்வில் கலந்து கொள்வதற்கான நிபந்தனைகள் மற்றும் வயது, கல்வி, அனுபவ தகுதிகள் அடங்கிய விபரங்களுடன் விண்ணப்ப படிவங்களைப்பெற படிவத்திற்கான வேண்டுதல் கடிதத்துடன் விளம்பர தேதிக்குப்பின் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளில் வாங்கப்பட்ட சென்னையில் மாற்றத்தக்க வகையிலான ரூபாய் நூறு (ரூ.100/-)க்கான வரைவோலை (Demand Draft) கொதிகலன்கள் இயக்குநர், சென்னை (Director of Boilers, Chennai) என்னும் பெயரில் பெறப்பட்டு, சுயவிலாசமிட்ட (239 மி.மீ X 115 மி.மீ.) ரூபாய் 10/- அஞ்சல் வில்லை (Stamp) ஒட்டிய அஞ்சல் உறையுடன் கீழ்க்கண்ட விலாசத்திற்கு அனுப்பி பெற்றுக் கொள்ளலாம்.

**கொதிகலன்கள் இயக்குநரின் நேர்முக உதவியாளர்**
**கொதிகலன்கள் இயக்குநர் அலுவலகம்**
**பொதுப்பணித்துறை வளாகம்**
**முதல் மாடி வடபுறம், சேப்பாக்கம், சென்னை - 600 005**

விண்ணப்ப படிவங்கள் வழங்கப்படும் கடைசி நாள் : **06.12.2013**

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் மேற்குறிப்பிட்ட விலாசத்திற்கு கிடைக்கப்பட வேண்டிய கடைசி நாள் : **24.12.2013**

(நேர்முக தேர்வுக்கு தகுதி வாய்ந்த விண்ணப்பதாரர்களுக்கு பிப்ரவரி 2014-க்கு பின்னர் நுழைவுச்சீட்டு வாயிலாக தனியாக தெரிவிக்கப்படும்).

தகுதி மற்றும் நிபந்தனைகளுக்கு **www.boilers.tn.gov.in** என்ற இணையதளத்தை அணுகவும்.

கொதிகலன்கள் இயக்குநர் மற்றும் தலைவர்
தமிழ்நாடு கொதிகலன் பணியாளர்கள் தேர்வு குழு
சென்னை - 600 005.

செமதொஇ/1273/வரைகலை/2013

Please enclose the following documents along with request for application as proof.

* For First Class - Photo Copy of Second Class Boiler Attendant Certificate

* For Second Class – Photo Copy of 10$^{Th\ std}$ (SSLC) pass certificate